**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 289/2014**

திருமதி. வள்ளியாதாள் (P.W. –1) **23.01.2025**

2,9,11,26 பிரதிவாதிகள் தரப்பில் முறையீடு இல்லை. அழைத்து ஆஜர் இல்லை. வழக்கு 10 வருடத்துக்கு மேலான வழக்கு. இந்த நீதிமன்றத்தின் மாண்புமிகு உச்சநீதிமன்றம் உத்தரவின் அடிப்படையில் top 25 யில் உள்ள வழக்கு என்பதால் 2,9,11,26 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவாவில் என்ன பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் பாகபிரிவினை பரிகாரம் கோரியுள்ளேன். தாவா முதல் பட்டியலிட்ட சொத்து என்னுடைய தகப்பனாருக்கு 1946 ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி. அந்த ஆவணத்தின் என்னுடைய தகப்பனார் தங்கமுத்துக்கும் மற்றும் 6 நபர்களுக்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. அந்த பாக ஆவணமே தவறானது. தவறாக சாட்சியம் அளிக்கிறேன், ஆவணத்திற்கு எதிரான சாட்சியம் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணம் தவறு என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு பரிகாரம் கோரவில்லை தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. தாவா இரண்டாம் பட்டியலிட்ட சொத்து 5ம் பிரதிவாதி தகப்பனார் ராமசாமிக்கு மற்றும் 3 நபர்களுக்கு சேர்ந்து கூட்டாக 26.2 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அந்த ஆவணமே தவறு. தாவா வழக்குரை 2வது பட்டியலிட்ட சொத்து விவரத்தை காண்பித்து கேட்டபோது சாட்சி சரி. அவர்கள் 6 நபர்களுக்கு பாத்தியம் என்று கூறுகிறார். பாகபிரிவினை பத்திரத்தின் என்னுடைய தகப்பனாருக்கு ஏ பட்டியலிட்ட சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது, பி பட்டியலிட்ட செத்தில் உரிமையில்லை என்பதால் அந்த

சொத்துக்களில் பாகம் கோரமுடியாது என்றால் சரி. அவ்வாறு என்னுடைய தகப்பனாருக்கு பாகம்மூலம் வந்த சொத்துக்களை என்னுடைய தகப்பனார் என்னுடைய சகோதரி 7ம் பிரதிவாதிக்கு தானம்மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றால் அந்த ஆவணம் தவறு. கட்டாயப்படுத்தி பெற்றுள்ளார்கள். வற்பூறுத்தி புகுந்தவீட்டார் சொன்னதன் பேரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

3. இந்த விவரங்களை தாவாவிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட தானசெட்டில் மெண்ட் ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு பரிகாரம் கோரப்படவில்லை, தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி என் அப்பா ஏற்படுத்திய தானசெட்டில் மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் 1946ம் வருட பாகப்பிரிவினை பத்திர தரப்பினர்களுடன் பாகம் பிரித்துகொண்டார் என்றால் அந்த ஆவணமும் தவறு. 1946ம் வருட பாகபிரிவினை பத்திரம் மற்றும் 1985 ம் வருட பாகப்பிரிவினை பத்திரம் ஆவணம் ஏற்பட்டபோதே தெரியும் என்றால் சரியல்ல. 2010ல் தெரியும். அதன் பிறகு 2014 ல் வழக்கு தாக்கல் செய்தேன்.

4. 2014 ம் வருட வழக்கு தாக்கல் செய்தபோது மேலே சொன்ன ஆவணங்கள் செல்லாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1946ம் வருட ஏ பட்டியலிட்ட பாகப்பிரிவினை சொத்துக்கள் 1985ம் பாக ப்பிரிவினை பத்திரப்படி பாகதாரர்கள் அனுபவம் செய்துவருவதால் எனக்கு தாவாவில் கோரியுள்ளபடி பாகம்கிடையாது என்றால் தவறு. என்னுடைய தகப்பனாருக்கு 1946ம் வருட சொத்துக்கள் 7ம் பிரதிவாதிக்கு பிரிந்துள்ளதால் எனக்கு பாகம் கிடையாது

என்றால் சரியல்ல. ஏ பட்டியலிட்ட சொத்துக்கள் ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்டதால் தாவாவில் கோரியுள்ளபடி பாகம் பிரிக்க தேவையில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.